# தலைவாசல் Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 31 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை | ஒக்ரோபர் 30, 2020


## 8 இலட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்பு

வவுனியா - பூவரசங் குளம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கடத்திச்செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

03

## வெளி மாவட்டங்களிலிருந்து
# யாழிற்கு வருவோருக்கு கட்டாய பதிவு






வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவோர் அந்தப் பகுதி கிராம அலுவலகர் ஊடாக பதிய வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கோவிட் -19 உயர்மட்டக் குழு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கோவிட் 19 தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் ஒன்று மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்தக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவாட்டச் செயலாளர் க.மகேசன், மாவட்ட மேலதிக அரவ அதிபர் எம்.பிரதீபன், வடமாகாண சுகாதார சேவைகள் பணப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், வடமாகாண உளநல சேவை பணிப்பாளர் கேசவன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் மாவட்ட கட்டளை தளபதி, உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அதன் போது,

- இறுதிச் சடங்கு 25 பேர் அனுமதி (2 தொடக்கம் 3 நாள்களில் நிறைவுறுத்த வேண்டும்) (வெளிமாவட்டங்களில் இருந்து வருவோர் கலந்தைகொள்ள வருகைதருவது தடை
- நடைபாதை வியாபாரம் மரக்கறி வியாபாரத்திற்கு மட்டும் அனுமதி
- தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கத் தடை
- திறந்த சந்தைக்கு அனுமதி இல்லை
- விளையாட்டு போட்டிகளை ஒத்திவைக்க வேண்டும்
- மக்கள் கூட்டங்களை, பொது நிகழ்வுகளை ஒத்திவைக்கவேண்டும்
- பேருந்துகளில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிக்களுக்கு அனுமதி
- உணவங்களில் இருந்து உணவு உண்பதற்குத் தடை (பொதிக்கு மட்டும் அனுமதி)
- வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தருவோர் கிராம அலுவலகர் ஊடாக பதிய வேண்டும்
- தொழிற்சாலைகளில் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்து தொழில் புரிவோர், முடக்கப்பட பகுதிகளில் இருந்து வருகை தந்து பணிபுரிவோருக்கு தங்குமிடம் உணவு வசதி ஏற்படுத்த வேண்டும்
- அரச அலுவலகங்களில் அரச உத்தியோகத்தர்களுக்கு தகவல் திரட்டு செய்யப்படவேண்டும்
- முடக்கப்பட்ட இடங்களில் இருந்து வெளியிடங்களுக்கு செல்லத் தடை, முடக்கப்பட்ட பகுதிகளுக்குள்ளே குடும்பத்தில் ஒருவர் மட்டும் அத்தியாவசிய தேவைக்கு மட்டும் வெளியில் செல்லலாம்
- அவசர தொலைபேசி உதவி இலக்கமாக 021 222 5000 செற்படும்.
- அவசர நிலை கருதி ஒருங்கிணைத்த செயலகமாக மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் 7 நாள்களும் செயற்படும்
- ஆலயங்களில் மதகுருமார்களுக்கு மட்டும் அனுமதி
- ஆலயங்களில் அன்ன தானங்களுக்கு தடை
- பாடசாலைகளில் மாணவர் அனுமதிக்கான நேர்முக பரீட்சைக்கு கட்டுபாடுகளை கல்வி திணைக்களம் மேற்கொள்ளும். போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## யாழ் – பருத்தித்துறை தனியார் பேருந்து சேவைகள் நிறுத்தம்!

பருத்தித்துறை யாழ்ப்பாணம் 750 வழித்தட சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்துகளும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கரவெட்டி ராஜ கிராமத்தைச் சேர்ந்த பலர் தனியார் பேருந்து சாரதிகள், நடத்துனர்களாகப் பணியாற்றும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி ராஜ கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்டது. பேலியகொட மீன் சந்தைக்கு சென்று வந்த நிலையில் அவர் கிராமத்தில் நடமாடியுள்ளார்.

03

## சுமந்திரன் ஆர்னோல்ட் திடீர் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரனியுமான எம்.ஏ.சுமந்திரன் யாழ் மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட்டைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் உறுப்புனர்களை கடந்த சில தினங்களாக சுமந்திரன் சந்தித்து வருகின்றார்.

இந்த நிலையிலையே இன்றையதினம் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள மாநகர சபையின் முதல்வரையும் உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

03

## நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை அபகரிக்கத் திட்டம்!

### பொதுமக்கள் குற்றச்சாட்டு

நெடுந்தீவுப் பகுதிக்கு நேற்றைய தினம் பயணித்த தொல்லியல்திணைக்களப் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் மற்றும் பௌத்த துறவிகள் அடங்கிய குழுவினர்

03

## 24 மாவட்டங்களில் கோரோனா தொற்றாளர்கள் அடையாளம்

### தப்பியது கிளிநொச்சி

நாட்டின் 25 மாவட்டங்களில் 24 மாவட்டங்களில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கோவிட் - 19 பரவுவதைத் தடுப்பதற்கான தேசிய செயலணி அறிவித்துள்ளது.

நேற்றைய (29) நிலவரப்படி வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து கோவிட் - 19 நோயாளர்கள்

03

## யாழ். மருத்துவ பீடத்தில் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் அடுத்த வாரம் முதல் மீண்டும் பி. சி. ஆர் பரிசோதனைகளை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து

03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

சந்திரிகா அரசின் ராணுவ தாக்குதல்களினால் ஐந்து இலட்சம் மக்கள் ஒரே இரவில் இடம்பெயர்ந்த நாள்.

**30/10/1995**



# 25 வருடங்களுக்கு முன்னொருநாள்

**தண்ணி கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்தி பருக்கினார்கள், லொறிகளில் றேடியேற்றருக்கென வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்து குடித்தார்கள், வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு நிலத்தில் குழி தோண்டி புதைத்தார்கள் உலகம் அவற்றை பார்த்து ”உச்” மட்டும் கொட்டிய அந்நாள்.**

**25 வருடங்களுக்கு முன்னொருநாள்.**

அன்று கந்தசஷ்டி விரதத்தின் கடைசி நாள்.

அன்று சூமழை பெய்து கொண்டு இருந்தது.

விடிந்த போது சாதாரணமாத்தான் விடிந்தது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தினை கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடாத்தி வருவதும், அன்றைக்கு சில நாட்கள் முன்பாக அந்த நடவடிக்கையை முறியடிக்க புலிகள் மேற்கொண்ட நடவடிக்கை வெற்றியைத் தராமல் போனதும் அப்போதைய பரபரப்பு செய்திகள்.

யுத்த முனையில் இராணுவத்தினரின் கைகள் ஓங்கியிருப்பது பலருக்கும் தெரிந்திருந்தாலும் புலிகளின் இராணுவ நகர்வுகள் பற்றி யாருக்கும் எதிர்வு கூற முடியாதென்கிற நிலையில் எந்த ஒரு யாழ்ப்பாண குடிமகனும் தானும் உறவும் ஒட்டுமொத்தமாய் இந்த நிலத்தை விட்டுப் பிரிவோம் என்று நினைத்திருக்க வில்லை.

காலையில் பாடசாலைக்கு புறப்படுகின்றவன் மாலையில் சிலவேளைகளில் நான் திரும்பி வராது இருக்க கூடும் என்று நினைத்திருப்பான். குண்டு வீச்சு விமானங்களின் இரைச்சல் கேட்டவன் இந்த விமானங்கள் வீசும் ஏதாவது ஒரு குண்டில் நான் செத்துப் போகலாம் என்று நினைத்திருப்பான். ஷெல் வீச்சுக்கள் அதிகமாகும் போது ஏதாவது ஒரு ஷெல் என் தலையில் விழுந்து யாரேனும் என்னைக் கூட்டி அள்ளிச் செல்லக் கூடும் என நினைத்திருப்பான். ஆனால், ஒரே இரவில் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணைவிட்டு தூக்கியெறியப்படுவோம் என எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

ஆனால் அன்றைய மாலை அத்தனைபேரும் தங்கள் வேர்களைப் பிடுங்கி நடந்தார்கள். எங்கே போவது, என்ன செய்வது என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு மட்டும் நடந்தார்கள்.

இரவு நெருங்குகிறது. இன்றைக்கும் புத்தூர்ப் பகுதிகளில் சண்டை நடந்தது என பேசிக்கொள்கிறார்கள். மின்சாரம் இல்லாத அந்தக் காலத்து யாழ்ப்பாணம் மிகச் சீக்கிரமாக நித்திரைக்கு சென்று விடும்.

அன்று பரவலாக எல்லா இடங்களிலும் ஒலிபெருக்கி கட்டிய வாகனங்களில் அறிவிப்பு செய்கிறார்கள் புலிகள்.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றி பாரிய இனவழிப்பு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ள இருக்கின்றதனால் உடனடியாக பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி வடமராட்சி வன்னிப் பகுதிகளுக்கு சனத்தை இடம்பெயருமாறு கோரியது அந்த அறிவிப்பு.

யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை 5 லட்சம். யாழ் குடாநாட்டினை வடபகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த வெறும் இரண்டு வீதிகளினூடாக 5 லட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து செல்ல வேண்டும் என்பதனை கற்பனை செய்தும் பார்க்க முடியாது.

ஆனால் மக்களுக்கு அதற்கெல்லாம் நேரமிருக்க வில்லை. மூட்டை முடிச்சுக்களை கட்டி எல்லோரும் வீதிகளில் இறங்க இறுகிப்போனது வீதி. எந்த விதமான முன் தீர்மானமும் இன்றி நெருக்கடியான நிலையிலேயே புலிகளும் இந்த முடிவினை எடுத்திருந்தார்கள் என்பதற்கு மக்களோடு மக்களாக இடம் பெயர்ந்த புலிகளின் படையணிகளும், காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த போராளிகளும் சான்று.

அந்த இரவு மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது. இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா அப்பா இவர்களை வீட்டிலே விட்டு வந்தவர்கள், நிறைமாத கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என வீதியில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணி நேரம் ஆயிற்று.

தண்ணி கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்தி பருக்கியவர்கள், லொறிகளில் றேடியேற்றருக்கென வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்து குடித்தவர்கள், வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு நிலத்தில் குழி தோண்டி புதைத்தவர்கள் உலகம் என்ற ஒன்று பார்த்து உச் மட்டும் கொட்டியது.


அடுத்த காலையே வானுக்கு வந்து விட்ட விமானங்கள், நிலமையை இன்னும் பதற்றப்படுத்தியது. அந்த வீதிக்கு அண்மையாக எங்கு குண்டு வீசினாலும் ஆயிரக்கணக்கில் பலியாக மக்கள் தயாராயிருந்தனர்.

24 மணிநேரங்களிற்கும் மேலாக நடக்க வேண்டியிருந்தது. நடந்தும் தங்க இடமெதுவும் இன்றி ஆலயங்கள், தேவாலயங்கள், பஸ் நிலையங்கள் என கண்ணில் பட்ட இடங்களில் மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தூக்கிப்போட்டனர்.

அந்த நாள் 1995 ம் ஆண்டு ஒக்டோபர் 30ம் திகதி.

இன்றுடன் 25 வருடங்கள் கடந்து விட்டன .

**நன்றி : இணையம்**



## யாழ்ப்பாண இடப்பெயர்வு நாள்

பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது
போகும் இடம் அறியாமல் – இங்கு
சாகும் வயதினில் வேரும் நடக்குதே
தங்கும் இடம் தெரியாமல்

கூடு கலைந்திட்ட குருவிகள் – இடம்
மாறி நடக்கின்ற அருவிகள்
ஒற்றை வரப்பினில் ஓடும் இவர்களின்
ஊரில் புகுந்தது ஆர்மி – ஒரு
குற்றம் செய்யாதவர் முற்றத்தி லாயிரம்
குண்டுகள் வீழுதே சாமி
சோகத்தின் கோடுகள் முகத்தில் – இங்கு
சொந்தங்கள் சேருமா நிலத்தில்?
கூடி மகிழ்ந்திட்ட கோயில் வயல்வெளி
யாவும் இவர் இழந்தாரே – நேற்றுப்
பாடி மகிழ்ந்திட்ட ஊரைத் துறந்துமே
போகும் திசை யறியாரே
நெஞ்சில் வழிவதோ துயரம் – வழி
நீளும் திசையிவர் பயணம்
தாயின் மடியினில் ஆசையுடன் தலை
சாய்த்து உறங்கிய நேரம் – வந்த
பேய்கள் கொளுத்திய தீயில் எரிந்தவர்
போகும் வழியெல்லாம் ஈரம்
மாடுகள் கூடவா அகதி ? – தமிழ்
மண்ணிலே ஏனிந்தச் சகதி ?
பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது
போகும் இடம் அறியாமல் – இங்கு
சாகும் வயதினில் வேரும் நடக்குதே
தங்கும் இடம் தெரியாமல்

– கவிஞர் புதுவை இரத்தினதுரை



# பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து பரிசீலனைகளுக்காக சுகாதார பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன

எதிர்வரும் நவம்பர் மாதம் 9ஆம் திகதி பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து பரிசீலனை மேற்கொள்வதற்காக சுகாதார பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான சுகாதார அணுகுமுறைகள் குறித்த எழுத்து மூல பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில் இணையவழிக் கற்பித்தல் தொடர்பான மேற்பார்வை ஒன்றை செய்தவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் இணைய வசதி இன்மை காரணமாக இந்த மேற்பார்வையை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# உரியவர்களின் கவனத்திற்கு...!



நல்லூர் பிரதேச செயலகத்தில்
தமிழ் பாரம்பரியம் படும் பாடு

# ஊரடங்கு காலப்பகுதியில் மருந்துகளை விநியோகிப்பவர்களுக்கான அறிவிப்பு!

ஊரடங்கு காலப்பகுதியில் மருந்துகளை விநியோகிக்கும்போது, மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை ஊரடங்கு அனுமதியாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் விசேட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்படும் காலப்பகுதியில், தடையின்றி பொது மக்களுக்கு மருந்துகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு வீடுகளுக்கு மருந்துகளை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்போது, தனிமைப்படுத்தல் சுகாதார விதிமுறைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் வழிகாட்டல்கள் ஆகியவற்றுக்கு அமைய மருந்தக உரிமையாளர்கள் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் மீலாதுன் நபி வாழ்த்துச் செய்தி

முஸ்லிம்கள் இன்று(வெள்ளிக்கிழமை) இஸ்லாத்தின் இறுதி இறைதூதரான நபிகள் பெருமானாரின் பிறந்த தினமான மீலாதுன் நபி விழாவைக் கொண்டாடுகிறார்கள்.

இதனை முன்னிட்டு ஜனாதிபதி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "இலங்கை வாழ் முஸ்லிம்கள் உலகெங்கிலும் பரந்து வாழும் முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து சகோதரத்துவத்துடன் முஹம்மத் நபியவர்களின் மீலாத் தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர்.

முஹம்மத் நபியவர்கள் மனித குலத்திற்காக செய்த அர்ப்பணிப்புகளை முன்னுதாரணமாகக் கொண்டு வாழ்வது சிறந்ததோர் அபிவிருத்தியடைந்த சமூகத்திற்கான அத்திவாரமாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

முன்னெப்போதுமில்லாத வகையில் பல்வேறு பிரச்சினைகளை தோற்றுவித்து உலகெங்கிலும் பரவிவரும் கொவிட் 19 நோய்த்தொற்றுக்கு மத்தியில் முழு மனித சமூகமும் பாரிய சவாலுக்கு முகம்கொடுத்துள்ளது.

இத்தகையதொரு கால சூழ்நிலையில் ஆன்மீக நம்பிக்கைகளுக்கு முதலிடமளித்து வாழ்வது எமக்கு உள அமைதியை பெற்றுத்தரும்.

நபிகளாரின் பிறந்த நாளை கொண்டாடும் இச்சந்தரப்பத்தில் அவர்கள் காட்டித் தந்த பெறுமானங்களுக்கு ஏற்ப வாழ்ந்து அனைத்து வகையான தீவிரவாதங்களையும் தோற்கடித்து சிறந்ததோர் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான திடவுறுதியுடன் இஸ்லாமியர்கள் ஒன்றுபடுவார்கள் என நான் நம்புகின்றேன்.

இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கும் உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களுக்கும் மகிழ்ச்சியான மீலாதுந் நபி தினத்திற்கு எனது பிரார்த்தனைகள்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேல் மாகாணத்திலுள்ள பள்ளிவாசல்களை மூடுமாறு அறிவிப்பு!

மேல் மாகாணத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களையும் மீள் அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கலாசார விவகார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களுக்கு அமைய வக்பு சபையினரால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிலைமை வழமைக்கு திரும்பும் போது மீள பள்ளிவாசல்களை திறப்பது தொடர்பில் அறிவுறுத்தல் விடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## யாழ். மருத்துவ...

வரும் நிலையில், யாழ். போதனா வைத்திய சாலையில் மாத்திரம் பி. சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதனால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

இதனைத் தவிர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பி. சி. ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு, முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று யாழ். பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ். கேதீஸ்வரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதையடுத்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் மீண்டும் பி. சி. ஆர் பரிசோதனைகளை அடுத்த வாரம் முதல் ஆரம்பிப்பதற்கு அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 24 மாவட்டங்களில்...

எவரும் கண்டறியப்படவில்லை. எனினும் இன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் இரண்டு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று செயலணி குறிப்பிட்டுள்ளது.

இந்த மாதம் 4ஆம் திகதிக்குப் பின்னர் கம்பஹா மாவட்டத்திலிருந்து அதிக எண்ணிக்கையில் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். கம்பஹாவில் இன்று காலை 6 மணிவரை 2 ஆயிரத்து 960 பேர் கோவிட் -19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாவது அதிக எண்ணிக்கையான தொற்றாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து கண்டறியப்பட்டுள்ளனர். அங்கு ஆயிரத்து 760 கோவிட் -19 நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

## யாழ் - பருத்தித்துறை...

இந்த நிலையில் ராஜ கிராமத்தில் 60 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தொற்றாளருடன் நேரடித் தொடர்பிலிருந்த யாராவது தனியார் பேருந்து சேவையில் கடமையாற்றினால் பயணிகளுக்கு தொற்று ஏற்படலாம் அதனால் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையோரைக் கண்டறியும் வகையில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் 750 வழித்தட சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்துகளும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## நெடுந்தீவு...

வெடியரசன் கோட்டையை அபகரிக்கும் நோக்கில் இரகசிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டையென்பது தமிழ் பௌத்த அரசன் வாழ்ந்த இடம் என இவர்கள் கருத்துரைத்தோடு, யாழ்ப்பாணம் விகாரதிபதியும் உடன் பயணித்து அப்பகுதிகளை நேரில் பார்வையிட்டு அப்பகுதியின் நில உரிமை மற்றும் தொல்லியல் திணைக்களத்தின் உரித்து தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளனர். இதன்போது அப்பகுதிகளை படமாக்கியதுடன் அப்பிரதேசத்தினையும் அதன் அண்டிய பகுதிகளையும் ரோன் கமராவின் உதவி கொண்டும் நீண்ட நேரம் ஒளிப்பதிவு செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் காரணமாக வெடியரசன் கோட்டைப் பகுதியினை பௌத்த சின்னமாக காண்பித்து ஆக்கிரமிக்கவோ அல்லது அப் பகுதியிலும் ஓர் விகாரையை அமைத்து நெடுந்தீவினையும் சிங்கள மயமாக்கும் முயற்சி இடம்பெறுகின்றதா? என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

## சுமந்திரன்...

இதேவேளை சுமந்திரனின் ஆதரவாளராக அடையாளப்படுத்தப்பட்டு வந்த ஆர்னோல்ட்டுக்கும் சுமந்திரனுக்கும் இடையே கடந்த தேர்தலில் முரண்பாடுகள் ஏற்பட்டதாகவும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன.

அத்தோடு இருவருக்கும் இடையிலான சந்திப்புகளும் எவையும் இடம்பெறாமல் இருந்த நிலையில் இன்று இருவரும் மீண்டும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆயினும் கூட்டமைப்பின் கீழுள்ள மாநகர சபையன் பாதீடு நிறைவேற்றம் சம்பந்தமாகவே இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக சுமந்திரன் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 8 இலட்சம்...

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலையடுத்து இன்று அதிகாலை இந்த கைது இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரங்களும், அதனை கொண்டு செல்வதற்காக பயன்படுத்திய கெப்ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



# இடர் வலயங்களுக்குள் மக்கள் ஒன்றுகூடுவது தவிர்க்கப்பட வேண்டும்

மருத்துவத் துறையிலும் கொவிட் ஒழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் தேவையான தகவல்களை இலகுவாக அறிந்துகொள்ளக் கூடிய புதிய செயலி (APP) மேல் மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டது.

கொவிட் நோய்த் தொற்றாளர்கள், தொடர்புடையவர்கள், தனிமைப்படுத்தல், பீசீஆர் பரிசோதனை சேவைகள், கண்காணிப்பு, தீர்மானங்களை மேற்கொள்தல், நோய்த்தொற்றாளர்களுக்கு கிட்டிய பிரதேசங்களுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட தேவையான பல தரவுகளை இந்த புதிய செயலியின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கொவிட் ஒழிப்பு செயலணி நேற்று (வியாழக்கிழமை) ஒன்றுகூடிய சந்தர்ப்பத்தில் மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தம்மிக ஜயலத் தலைமையிலான குழுவினால் புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

புதிய அபிவிருத்திகள் தொடர்பான தகவல்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அறிந்துகொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாடளாவிய ரீதியில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளின் எண்ணிக்கை 350 ஆகும். அவற்றில் 28 பிரிவுகளில் கொவிட் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுவதை தவிர்ப்பதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக செயலணி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

வைரஸ் பரவுவதை தவிர்ப்பதற்கு முதலாவது, இரண்டாவது தொற்றாளர்கள் உட்பட 41000 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில் எழுமாறாக பீ சீ ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பல சந்தர்ப்பங்களில் கொவிட் தொற்றாளர்கள் அதிகரிப்பதற்கு காரணமான விடயங்களை சரியாக அறிந்து மீண்டும் அவ்வாறு இடம் பெறுவதற்கு இடமளிக்கக்கூடாது.

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக எழுமாறான பரிசோதனைகள்மேற்கொள்ளப்பட்டன. எனினும் எதிர்பாராத விதமாக பேலியகொடை மீன் சந்தை மற்றும் மினுவன்கொடையை அண்டிய பிரதேசங்களில் கொவிட் கொத்தணி உருவானது.

பொருட்கள் பகிர்ந்தளிக்கும் வலயமைப்பின் ஊடாக வைரஸ் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுவதை தவிர்ப்பதற்கு அனைத்து தரப்பினரதும் உதவி தேவையானதாகும். சுகாதார துறையின் வழிகாட்டல்களை முழுமையாக பின்பற்றுவது அனைவரினதும் சமூக பொறுப்பாகும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தம்புள்ளை உள்ளிட்ட பொருளாதார மத்திய நிலையங்களை அண்மித்த பிரதேசங்களில் எழுமாறான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். கொவிட் கொத்தணி உருவாகக் கூடிய இடங்கள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நேற்று நள்ளிரவு முதல் மேல் மாகாணத்திற்கு பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு சட்டத்தை மீறுவோருக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

எந்தவொரு பொலிஸ் நிலையத்தினாலும் ஊரடங்கு சட்ட அனுமதிப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் மிகவும் அவசரமான சந்தர்ப்பங்களின் போது அதற்கு இடமளிக்கப்படும்.

இடர் வலயங்களுக்குள் மக்கள் ஒன்றுகூடுவது தவிர்க்கப்பட வேண்டும். மேல் மாகாணத்தில் திருமணங்கள் மற்றும் சமய நிகழ்வுகள் உள்ளிட்ட மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி தெரிவித்தார்.



# இரண்டாம் அலையானது மிக வேகமாக பரவிவருகின்றது

கொரோனா தொற்றின் இரண்டாம் அலையானது மிக வேகமாக பரவி வருவதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று(வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், “மேல்மாகாணத்திலேயே அதிக கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். அதிலும் இம்முறை மிகவும் வேகமாக தொற்று பரவிவருகின்றது.

இது தொடர்பாக ஆராய்வதாற்காக விசேட பரிசோதனைகளை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைகழகத்தில் முன்னெடுக்கபட்டுள்ளது. கந்தகாடு, பேலியகொட, மினுவாங்கொடை ஆகிய பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் மாதிரிகளை கொண்டு இந்த பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த ஆய்வு அறிக்கையும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும், மேல்மாகாணத்தில் அதிக கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காண்பதை தொடர்ந்து மேல்மாகாணத்திற்கு இன்று இரவு முதல் ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 5 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும். திங்கள் காலை கண்டிப்பாக ஊரடங்கு தளர்த்தப்படும். ஆனால் தற்போது ஊரடங்கு அமுலில் உள்ள பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட மாட்டாது“ எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வளி மாசு மட்டத்தின் அளவு அசாதாரணமான முறையில் அதிகரிப்பு

நாட்டில் வளி மாசு மட்டத்தின் அளவு அசாதாரணமான முறையில் அதிகரித்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி, புத்தளம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கடந்த 27ஆம் திகதி முதல் இவ்வாறு அசாதாரணமான முறையில் வளி மாசு அதிகரித்து வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்திய துணைக் கண்டத்தின் மேல் வானத்தின் வளி மாசு எமது நாட்டின் வளிமண்டலத்திற்குள் நுழைவதனாலேயே இவ்வாறு வளி மாசு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# படுவாங்கரையை ஊடுறுவிய கொரோனா!

மட்டக்களப்பு- பட்டிப்பளை, மாவடிமுன்மாரியில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் மேலும் கூறியுள்ளதாவது, “மாவடி முன்மாரியில் கொழும்பில் இருந்து தடிமன் காச்சலுடன் மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு வந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று (வியாழக்கிழமை) இரவு கண்டறியப்பட்டுள்ளது.

ஓட்டமாவடியில் ஒருவர் உட்பட இருவர் கண்டறியப்பட்டதையடுத்து மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது.

எனவே, கொழும்பில் இருந்து வருபர்கள் தொடர்பாக சுகாதார திணைக்களத்துக்கு பொதுமக்கள் அறியத்தர வேண்டும்

பேலிய கொடை மீன் சந்தையுடன் தொடர்புபட்டவர்கள் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 31 பேர் இதுவரைக்கும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கு மாறாக கொழும்பு-பம்பலப்பிட்டியில் பணிபுரிந்துவிட்டு வீடு திரும்பிய பெரியபோரதீவு பட்டாபுரத்தைச் சேர்ந்த ஒருவர், காச்சல் காரணமாக சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு சென்றபோது கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர் கொரோனோ தொற்றுடன் பொது பேரூந்தில் பிரயாணம் செய்து வீட்டை வந்தடைந்துள்ளார். இவருடன் பிரயாணம் செய்தவர்களையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே நேற்று, வாழைச்சேனை மற்றும் மாவடிவேம்பு முன்மாரியில் ஒருவர் உட்பட இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் கூடியளவு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி அவதானமாக செயற்பட வேண்டும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை விமானப் படைக்கு புதிய தளபதி நியமனம்



இலங்கை விமானப் படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் சுதர்ஷன பதிரண நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை விமானப் படையின் 18ஆவது தளபதியாக இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நவரம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.